*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*15 02 2026 SUNDAY   12 40 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

## தலைப்புச் செய்திகள்

1. நகர்ப்புற சவால்களை எதிர்கொள்ளும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ள நிதியத்திற்கு, ஒரு லட்சம் கோடி ரூபாயை அளிக்க ஒப்புதல் அளித்துள்ள மத்திய அமைச்சரவைக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் முதல் மின்னணு பணப்பரிவர்த்தனை அடிப்படையிலான பொதுவிநியோகத் திட்டத்தை மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று காந்திநகரில் தொடங்கி வைத்தார்.

3. இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான பொருளாதார வழித்தடம் அமைக்கப்பட்டுள்ளது வர்த்தக தொடர்புகளை மேலும் ஊக்குவிக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

4. மஹா சிவராத்திரி இன்று நாடுமுழுவதும் கொண்டாடப்படுகிறது.

5. அமெரிக்காவில் நடைபெற்று வரும் தடகள போட்டியில், இந்திய ராணுவ வீரர் குல்வீர் சிங் வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>>><<<<<<<

நகர்ப்புற சவால்களை எதிர்கொள்ளும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ள நிதியத்திற்கு, ஒரு லட்சம் கோடி ரூபாய் அளிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், உயர்தரமான நகர்ப்புற உள்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு, சந்தை நிதி மற்றும் தனியார் பங்களிப்பு இதில் முக்கிய பங்களிக்கும் என்று கூறியுள்ளார்.

மக்களை மையமாக கொண்ட கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்கு இது உதவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய உந்துசக்திகளாக நகரங்கள் மாறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் கீழ் இந்த நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப, தகவமைத்துக் கொள்ளும் நகரங்களை உருவாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

இந்த திட்டத்தை செயல்படுத்த இந்த நிதியம் 25 சதவீதம் வரை நிதி வழங்கும் என்றும், 50 சதவீதத்தை தனியார் ஒத்துழைப்புடன் சந்தை மூலம் திரட்ட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, 2031 ஆம் ஆண்டு வரை செயல்பாட்டில் இருக்கும் என்றும் அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த ஐந்தாண்டுகளில், 4 லட்சம் கோடி ரூபாய் நகர்ப்புற மேம்பாட்டிற்கான முதலீடுகள் கிடைக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

நாட்டின் முதல் மின்னணு பணப்பரிவர்த்தனை அடிப்படையிலான பொதுவிநியோகத் திட்டத்தை மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று காந்திநகரில் தொடங்கி வைத்தார்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் உணவு தானியங்கள் வெளிப்படைத் தன்மையுடன் விநியோகம் செய்வதற்கு இது உதவும் என்று குஜராத் மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதன் மூலம், பொது விநியோகத் திட்டத்திற்காக ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட டிஜிட்டல் டோக்கன்களைப் பயன்படுத்தும் நாட்டின் முதல் மாநிலமாக குஜராத் உருவெடுத்துள்ளது.

இந்த முன்னோடித் திட்டத்தின் கீழ், அகமதாபாத், சூரத், ஆனந்த் மற்றும் வல்சாட் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்று டோக்கன்களைப் பெற்றுக் கொண்டனர்.

>>>>>>><<<<<<<

இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான பொருளாதார வழித்தடம் அமைக்கப்பட்டுள்ளது, வர்த்தக தொடர்புகளை ஊக்குவிக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஜெர்மனின் முனீச் நகரில் நடைபெற்ற பாதுகாப்பு குறித்த கருத்தரங்கில் பேசிய அவர், தற்போதுள்ள புவிஅரசியல் சூழலை கருத்தில் கொண்டு, ஐ.நா. சபை சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

எண்ணெய் கொள்முதலை பொறுத்தவரை ஐரோப்பிய நாடுகளைப் போலவே, எண்ணெயின் இருப்பு மற்றும் விலையை கருத்தில் கொண்டு, சூழலுக்கு ஏற்ப சிறந்த வழிமுறைகள் தேர்ந்தெடுக்கப்படும் என்று டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இதற்கிடையே, இன்று ஜெர்மனி, ஜப்பான் மற்றும் பிரேஸில் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை சந்தித்து, இந்தியாவுடனான உறவு குறித்து டாக்டர் ஜெய்சங்கர் விரிவான பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<<

இந்திய ராணுவத்தின் தகவல் தொடர்பு பிரிவின் 116வது நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1911ஆம் ஆண்டு இதேநாளில் தொடங்கப்பட்ட ராணுவத்தின் தகவல் தொடர்பு பிரிவு, தற்போதைய 21ஆம் நூற்றாண்டின் மின்னணுப் புரட்சிக்கு ஏற்ப, தன்னை தகவமைத்துள்ளதாக இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட அச்சுறுத்தல்கள் நிறைந்த சூழலில், ராணுவத்திற்கு ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் விதத்தில் அதிநவீன தகவல் தொடர்பு நுட்பங்களை தற்போது இந்தப் பிரிவு கையாண்டு வருவதாக இப்பிரிவின் தலைவர் லெப்டினென்ட் ஜென்ரல் விவேக் டோக்ரா தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, ராணுவத்தின் தகவல் தொடர்பு பிரிவானது, சிக்கலான சூழலில் துரிதமாகவும், சிறப்பாகவும் செயல்பட்டதாக கூறியுள்ளார்.

*இணையதள அச்சுறுத்தல்கள், மின்னணு போர்முறை மற்றும் நேரடி இடையூறுகளை சமாளிக்கும் விதத்தில், மீள்திறன் கொண்ட இணையவசதிகளை உருவாக்குவதில் இப்பிரிவு தற்போது முனைப்புடன் ஈடுபட்டுள்ளதாக ஜென்ரல் விவேக் டோக்ரா தெரிவித்துள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*நாடுமுழுவதும் மஹா சிவராத்திரி இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

*குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்தியா தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் பயணிக்கவும், அனைத்து மக்களுக்கும் சிறப்பான வாழ்க்கை அமையவும் இறைவனை பிரார்த்திப்பதாக குறிப்பிட்டுள்ளார்.*

*குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில், காசி முதல் ராமேஸ்வரம் வரை இந்த புனித திருவிழா, நாட்டின் ஆன்மிக பாரம்பரியத்தின் அடையாளமாக திகழ்கிறது என்று தெரிவித்துள்ளார்.*

*மகாதேவன் மற்றும் பார்வதி தேவியின் ஆசிர்வாதம், மக்களுக்கு மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் நல்ஆரோக்கியத்தை வழங்க வேண்டும் என்று திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், சிவபெருமானின் அருள் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்றும், நாடு செழிப்பின் உச்சத்தை அடைய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.*

*மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்ட தலைவர்களும் மகாசிவராத்திரி வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.*

*இதற்கிடையே, நாடுமுழுவதும் உள்ள சிவன் கோவில்களில் இரவு முழுவதும் சிறப்பு பூஜைகள் நடைபெறவுள்ளன.*

*(சவுண்ட் பைட் - ஓம் நமசிவாய 20 செகண்ட்ஸ்)*

*இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்யவுள்ளனர். இந்நாளையொட்டி, பக்தர்கள் புனித தலங்களில் நீராடி வருகின்றனர்.*

*>>>>>>><<<<<<<*

*லடாக்கில், தலைநகர் லே-யில் உள்ள Dosmochey மற்றும் Likir முக்கிய புத்த மடாலயங்களில் இன்று திருவிழாக்கள் நடைபெறுகின்றன.*

*தீமையை நன்மை வெல்வதை அடையாளப்படுத்தும் வகையில், இந்த திருவிழா புத்த துறவிகளால் கொண்டாடப்படுகிறது.*

*இதில், பௌத்த சத்ரிய முகமூடி நடனங்கள் நடைபெறவுள்ளன.*

*மேலும், கடும் குளிர்காலத்தின் நிறைவை குறிக்கும் விதத்திலும், வரவிருக்கும் இளவேனில் பருவத்தை வரவேற்கும் விதமாகவும் இந்த கொண்டாட்டங்கள் அமைந்துள்ளன.*

*உலக அமைதி, மழைப் பொழிவு, செழிப்பான அறுவடை ஆகியவற்றுக்காக, 15 நாட்கள் சிறப்பு பிரார்த்தனைகள் மற்றும் சடங்குகள் நடைபெறவுள்ளன.*

*>>>>>>><<<<<<<*

*சென்னை கிண்டி சர்தார் பட்டேல் சாலை மற்றும் ராஜீவ்காந்தி சாலையை இணைக்கும் மேம்பாலத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.*

*இந்தப் பகுதியில் நிலவும் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக, மாநில அரசின் சார்பில் சுமார் 61 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த மேம்பாலம், இன்று முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளது.*

*இதன் காரணமாக அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*>>>>>>><<<<<<<*

*சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து மருத்துவ காரணங்களுக்காக பூமிக்கு திரும்பிய நான்கு வீரர்களுக்குப் பதிலாக, நாசாவால் அனுப்பப்பட்ட 4 புதிய விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தை சென்றடைந்தனர்.*

*அமெரிக்காவைச் சேர்ந்த Jesika Meir, Jack Hathaway, பிரான்ஸின் Sophie Adenot, ரஷ்யாவின் Andrei Fedyaev ஆகிய நான்கு பேர், சர்வதேச விண்வெளி நிலையத்தில் 9 மாதங்கள் தங்கியிருந்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.*

*நாசா-வின் 65 ஆண்டுகால மனித விண்வெளி பயண வரலாற்றில் முதல்முறையாக அவசர மருத்துவ காரணங்களுக்காக விண்வெளி வீரர்கள் பூமிக்கு உடனடியாக அழைத்து வரப்பட்டுள்ளனர்.*

*>>>>>>><<<<<<<*

*அமெரிக்காவில் நடைபெற்று வரும் தடகள போட்டியில், இந்திய ராணுவ வீரர் குல்வீர் சிங் வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*North Carolena-வில் நடைபெற்ற இப்போட்டியின் 5 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*-------------*

*உலகக் கோப்பை ட்வென்ட்டி ட்வென்ட்டி கிரிக்கெட் போட்டியில் இன்று 3 ஆட்டங்கள் நடைபெறுகின்றன.*

*மும்பையில் நடைபெற்று வரும் வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் நேபாள அணி சற்றுமுன்வரை 19 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 128 ரன் எடுத்துள்ளது.*

*பிற்பகல் 3 மணிக்கு, சென்னை சேப்பாக்கத்தில் நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில், அமெரிக்கா - நமீபியா அணிகள் மோதுகின்றன.*

*கொழும்புவில் இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.*

*>>>>>>><<<<<<<*

*இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் தொடர் இன்று தொடங்குகிறது.*

*இப்போட்டியின் முதல் ஆட்டம் சிட்னியில் பிற்பகல் மணி 1.45க்கு தொடங்குகிறது.*

*>>>>>>><<<<<<<*

*சென்னை சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஹர்மீத் தேசாய் - யஷஸ்வினி கோர்படே இணை இறுதியாட்டத்தில் இன்று ருமேனியாவின் Edward - Bernadette இணையை எதிர்கொள்கிறது.*